## செம்மரம் வெட்ட வந்ததாக சுட்டுக்கொல்லப்பட்ட

# திருவண்ணாமலை தொழிலாளி உடல் மறுஉடற்கூறு முடிந்து மகனிடம் ஒப்படைப்பு

திருமலை, செப். 18: சித்தூர் மாவட்டம், ஸ்ரீகாளஹஸ்தி அடுத்த கொல்லப்பல்லி என்ற வனப்பகுதியில் செம்மரம் வெட்ட வந்ததாக கூறி திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாதுமலையில் உள்ள கானமலை கிராமத்தை சேர்ந்த காமராஜ் என்பவரை கடப்பா வனத்துறை அதிகாரிகள் கடந்த 31ம் தேதி சுட்டுக் கொலை செய்தனர்.

இந்த கொலையில் சந்தேகம் இருப்பதாகவும் மறு பிரேத பரிசோதனை செய்ய வேண்டும் எனவும் மக்கள் கண்காணிப்பகம் சார்பில் உறவினர்கள் ஆந்திர மாநில உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர்.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் இதுதொடர்பாக மாநில முதன்மை செயலாளர் உட்பட 9 பேர் விளக்கமளிக்கவும், அதுவரை இறந்த காமராஜ் உடலை ஸ்ரீகாளஹஸ்தி அரசு மருத்துவமனையில் வைக்க உத்தரவிட்டது.

இதைத்தொடர்ந்து சமீபத்தில் நடந்த வழக்கு விசாரணையின் போது நீதிபதி, காமராஜ் உடலை மறுபிரேத பரிசோதனை செய்து அறிக்கை வெளியிட உத்தரவிட்டார். அதன்படி, ஸ்ரீகாளஹஸ்தி அரசு மருத்துவமனையில் தலைமை மருத்துவர் முன்னிலையில் இறந்த காமராஜின் சடலம் மறு உடற்கூறு ஆய்வு நேற்று செய்யப்பட்டது.

தொடர்ந்து வழக்கறிஞர் ரவி முன்னிலையில் ஸ்ரீகாளஹஸ்தி தாலுகா காவல் நிலைய இன்ஸ்பெக்டர் சுதர்சன பிரசாத் இறந்த காமராஜின் மகன் ராமராஜனிடம் அவரது உடலை ஒப்படைத்தார்.

தினகரன் Tue, 18 September 2018
epaper.dinakaran.com/c/32297273